எல்லா விவசாயக் கருத்தரங்குகளிலும் அவர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லை. நாங்கள் அவர்களை அவ்வாறு கேட்டுக்கொண்டோம். அவர்களும் இது சிக்கனமான முறை என்ற காரணத்தினால், அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, இப்பொழுது நடைமுறையில் அம்மாதிரி போட்டுக்கொண்டு வருகிறார்கள். விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் சரியாக செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிற நேரத்தில், தஞ்சையில் அமோக விளைச்சல் ஏற்பட்டிருக்கும் பொழுது விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் நல்ல முறையில் வேலை செய்கிறார்கள். என்று சொன்னதற்கு நன்றி. அவர்களுடைய தேவையைப்பற்றியும், வாழ்க்கை வசதியைப்பற்றியும் பரிசீலிக்கலாம்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : கோட்டாட்சிக்கு ஒரு மாவட்ட வேளாண்மை விவசாய அலுவலர் என்ற அடிப்படையில் அரசாங்கம் கொள்கை வகுத்திருக்கிறதா ? சேரன்மாதேவியில் அம்மாதிரி ஒரு விவசாய அலுவலகத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, அங்கே ஒரு விவசாய அலுவலகம் அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்வியின் முன்பகுதி பரிசீலனையில் இருக்கிறது. இரண்டாவது பகுதியையும் கவனிக்கலாம்.

இரசாயன உர வினியோகம்

***514 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகு பயன் தரும் (**High yielding**) விவசாயத்திற்காக விசேஷமாக ரசாயன உரம் மத்திய சர்க்காரால் எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

(இ) அதற்கு ஏதாவது நிபந்தனைகள் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) பற்பல மாவட்டங்களில் இந்தத் திட்டங்களின் கீழ் அடங்குமென மதிப்பிடப்பட்டுள்ளன ,பரப்பளவின் அடிப்படையிலும் பரிந்துரைக்கப்பட்ட உர அளவின் அடிப்படையிலும் உர ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(இ) மிகு பயன்தரும் பயிர் வகைத் திட்டத்தின் தேவைகள் முழு அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இத்திட்டத்தைப் பாதிக்கும் வகையில், இந்த உரங்கள் வாணிக பணப்பயிர்களுக்கு வழங்கப்படலாகாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த விசேஷ ரசாயன உரத்தை உபயோகப்படுத்தும் மிகுபயன் தரும் விவசாயத்தின் காரணமாக எந்தெந்த மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை அதிகமாக கொடுத்திருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தஞ்சை, கனம் அங்கத்தினர் சார்ந்திருக்கிற வட ஆற்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம் இப்படி எங்கெங்கே வாய்ப்பு வசதி இருக்கிறதோ, அங்கெல்லாம் மிகுபயன் தரக்கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கூடுதலாக நிறைவேற்றப்பட்டது தஞ்சை மாவட்டத்தில் தான்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, ஹையீல்டிங் ரசாயன உரம் நாம் இந்திய சர்க்காரை இந்த ஆண்டு எவ்வளவு கேட்டோம் ? மத்திய சர்க்கார் கொடுத்தது எவ்வளவு சதவிகிதம் குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி நாம் கேட்டதைக் கொடுப்பதற்கு மறுபடியும் வலியுறுத்த இந்த சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது நம்மிடம் உரம் தேங்கியிருக்கிறது. தேவையான உரத்தை கேட்டுக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக போதுமான மழை பெய்யாத காரணத்தினால், உரம் தேங்கி இருக்கிறது நிலைமைதான் இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு எவ்வளவு உரம் வேண்டுமானாலும் அந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்பொழுது இருக்கிற உரத்தை விற்றால், தமிழக அரசுக்கு அதிக ஆதாயம் ஏற்படும்.

திரு. கே. விநாயகம்: மத்திய சர்க்கார் நமது மாநில சர்க்காருக்கு தேவையான அளவு கெமிகல் பெர்டிலைஸர்ஸ் கேட்ட அளவுக்கு தாராளமாகக் கொடுத்து வருகிறார்கள் என்பது உண்மையா? நாம் தான் வாங்கி இன்னும் போதிய அளவு பயன்படுத்தவில்லை என்பது உண்மையா? நம்முடைய சர்க்காரைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் எந்தவிதமான பாரபட்சமும் காட்டுவதில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி 1966–67-க்கு முன்பிருந்த நிலைமை வேறு, அப்பொழுது இருந்த அரசு கேட்டதில் பாதி அளவு தான் கொடுத்தார்கள். நாங்கள் பொறுப்பேற்ற பிறகு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நமக்குத் தேவையான ரசாயன உரத்தைக் கொடுக்க வேண்டுமென்று முதல் அமைச்சர்கள் மாநாட்டிலும் உணவு அமைச்சர் மாநாட்டிலும் தொடர்ந்து நாம் வற்புறுத்தியதன் விளைவாக நமக்குக் கொடுப்பதை கொஞ்சம் கூடுதலாக்கினார்கள். நம் தேவையை முழுக்க கொடுக்க வில்லை. இந்த நேரத்தில் உரம் தேங்கியிருக்கிறது என்ற கேள்வி வரும்பொழுது, கடந்த இரண்டு ஆண்டு காலமாக மழை பெய்யாத காரணத்தினால் தான் உரம் தேங்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த விஷயத்தில் நாம் மத்திய சர்க்காரை குறை சொல்வதற்கில்லை. தேவையான அளவு கொடுக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறபொழுது, திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் நமக்கு கொடுக்கவேண்டிய உரத்தை கொடுக்க வெண்டிய அளவில் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். திரு. விநாயகம் அவர்களும் அதை சந்தோஷத்தோடு கேட்டுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

மு.ப. 10.00 [குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) தளவாய்புரம் கிராம அரிசன குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்த நெல்லை நிலச்சுவான்தார்கள் அறுவடை செய்து அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்ற முயற்சித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்கள், ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, "நெல்லை மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, தளவாய்புரம் கிராம அரிசன குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்த நெல்லை, நிலச்சுவான்தார்கள் வன்முறையில் அறுவடை செய்து கொண்டு அரிசன ஏழை விவசாயிகளை நிலத்தைவிட்டும் வெளியேற்ற முயற்சிப்பதால், இவ்வட்டாரத்தில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது அரசு அவசர நடவடிக்கை எடுத்து, நில வெளியேற்றத்தைத் தடுத்து, சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று விவாதிக்க, பேரவையில் இன்றைய மற்ற நடவடிக்கைகளை ஒற்றிவைக்கக் கேட்டுக்கொள்கிறேன்" என்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

இது அரசினுடைய அன்றாட நிகழ்ச்சிக்குட்பட்டது என்பதாலும், இன்றைக்கு நிதி ஒதுக்க மசோதாவின்மேல் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு இருக்கிறது என்பதாலும், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்க மறுக்கிறேன்.